IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No. 47/2022
Deposition of Witness for PW1.

Name : திரு. வரதராஜன்
Father Name :
Age :
Caste :
Calling :
Religion :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.01.2024

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

நான் இவ்வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். சத்தியபிரமாணத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் நான் சொன்னவை. 04.01.1968ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ.1. 24.05.2006ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் அசல் வா.சா.ஆ.2. 04.04.2012ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ.3. நான் வெள்ளிச்சந்தை காவல் உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.4. அதற்கு காவல் நிலையத்தில் கொடுத்த மனு ரசீது வா.சா.ஆ.5. புல எண் 648/5ஏ1ஏ சம்மந்தப்பட்ட சிட்டா இணையதள நகல் வா.சா.ஆ.6. என் பெயரில் உள்ள நில வரி ரசீது வா.சா.ஆ.7. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2. பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.